1975 ஏப்ரல் 11]

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, பொது மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே ஒரு தடைக்கல் போல இருக்கிறது இந்த வாரியம். பொதுவான அபிப்பிராயம் வாரியத்தினிடத்திலிருந்து ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே அமைச்சரவர்கள் பதிலைத் தெளிவாகச் சொல்லிவிட்டார். இது பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லிவிட்டார். திரும்பத் திரும்ப அதே கேள்வியைக் கேட்டால் அதே பதிலைத்தான் அவர் சொல்வார்.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, இப்படி கால தாமதம் ஏற்படுகிறது என்று சொல்லப் படுவதால், டெம்பரரி ரிலீஃபாக இத்தனை நாட்களுக்குள் பதில் வந்து விடவேண்டு மென்று சொல்லக் கூடிய வகையில் பரிவுரைகளை வாரியத் திற்கு அரசு வழங்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன். இவைகளும் பரிசீலனையில் இருந்து வருகின்றன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, வருவாய்த்துறை வாரியத்தைக் கலைத்து விடவேண்டுமென்று அரசு எடுத்த முடிவிற்கு ஏற்ப நிர்வாக சீர்திருத்தக் குழு மாற்று யோசனையும் தெரிவித்திருக்கிறதே. என்னென்ன யோசனையைத் தெரிவித்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, ஏற்கெனவே அந்த அறிக்கை சபையில் வைக்கப்பட்டிருக்கிறது. தனியாக இப்போது விவரம் தேவையென்று சொன்னால் இதற்காகத் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

தஞ்சை மாவட்டக் கலெக்டர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம்

*573 வினா—திரு என். கிட்டப்பா: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சை மாவட்ட கலெக்டர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடங்கள் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், விபரம் என்ன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) : தஞ்சை மாவட்டக் கலெக்டர் அலுவலகத்தில் புதிய கட்டடங்கள் கட்டும் செயற்குறிப்பு நிதி நெருக்கடி நிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தோவாளை வட்ட அலுவலகக் கட்டடம்

*574 வினா—திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) குமரி மாவட்டம், தோவாளை தாலுகாவில் புதியதாக வட்ட அலுவலகம் (Taluk Office) கட்டுவதற்குரிய செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது கட்டட வேலை ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) தற்சமயம் இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. வீ.கே. இராஜாப்பிள்ளை: தலைவரவர்களே, தோவாளை தாலுகாவில் பூதபாண்டியில் வட்ட அலுவலகக் கட்டடம் கட்டப்பட்டு 150 வருஷங்களுக்கு மேல் இருக்கும். இது பாழடைந்த நிலையில் இருக்கிறது. அதோடு இட நெருக்கடி மிகுதியால் அங்கே வேலை செய்கிற ஊழியர்களுக்கும், பொது மக்களுக்கும் இடைஞ்சலாக இருப்பதால் புதிய கட்டடத்தைக் கட்ட அரசால் உத்தரவிடப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, பூதபாண்டி அலுவலகம் 1800ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. தோவாளையில் ஊராட்சி ஒன்றிய கட்டடத்திற்கு அருகில் உள்ள காலி இடத்தில் எல்லா வசதிகளுடனும் கூடிய கட்டடம் ஒன்றைப் புதியதாகக் கட்டலாம் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அது பரிசீலனை செய்யப்பட்டு இப்போது இந்த ஆண்டு எடுத்துக் கொள்வதில்லை என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.